**கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.**

**OS.No. 174/2023**

திரு.நாகராஜன் (P.W.–2) **11.08.2026**

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

1. என்னிடம் காட்டப்படும் 01.10.1992 ம் தேதியிட்ட ஆவண எண்.4436/1992 ன் படி வாதியின் கணவரும் பிரதிவாதியும் சேர்ந்து அவரது தாயாருக்கு பாத்தியப்பட்ட சொத்தை விற்பனை செய்துள்ளார்கள் என்றால் சரிதான். ஆனால் தாவா சொத்தை அவர்கள் 1988 ல் கிரயம் பெற்றுவிட்டார்கள். மேற்படி தொகையைக் கொண்டுதான் தாவா சொத்தில் கட்டடம் கட்டப்பட்டது என்று சொன்னால் கட்டடம் எப்போது கட்டினார்கள் என்று எனக்கு தெரியாது.

2. நான் தாவா சொத்தின் அருகிலேயே தான் குடியிருப்பதால் எனக்கு 92 இல் சொத்து விற்கப்பட்டதும் தாவா சொத்தில் கட்டடம் கட்டப்பட்ட விபரங்களும் எனக்கு தெரியும் எனவும் வழக்கிற்காக தெரியாது என பொய் கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ–1 எழுதப்படும் போது பிரதிவாதியின் தகப்பனார் ராமசாமி உடன் ரமேஷ் பத்மாவதி நான் மற்றொரு சாட்சியும் உடன் இருந்தோம். நான் வாதியின் கணவருக்கு உடனிருந்து கையொப்பம் செய்தேன் என்றால் ராமசாமி அழைத்து கையொப்பம் செய்யசொன்னதால் கையொப்பம் செய்தேன்.

3. வா.சா.ஆ–1 தான செட்டில்மெண்ட் ஆவணம் ராமசாமியின் விருப்பத்தின் பேரில் எழுதப்பட்டுள்ளதாக கூறும் நிலையில் அவர்

உண்மையிலேயே தனது பேரனுக்கு சொத்தை எழுதி வைப்பதாக இருந்தால் உயிலாக எழுதியிருப்பார் என்று சொன்னால் சரியல்ல. அவர் பிரியப்பட்டடு தான் தான செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைத்தார். அவர்களுடைய குல வழக்கப்படி பெரியவர்களிடம் சென்று மோசடியாக ஆவணம் தயார் செய்யப்பட்டுள்ளதாக கூறி அதனை மறுபடியும் ரத்து செய்து தரும்படி கேட்டனர் என்று சொன்னால் சரியல்ல. அவ்வாறு எவ்வித முறையீடும் செய்யவில்லை. அவர்கள் எங்களிடம் முறையிட்ட பின்னர் கோட்டாட்சியர் மற்றும் மாவட்ட ஆட்சியரிடம் முறையீடு செய்து மேற்கண்ட ஆவணத்தை ரத்து செய்து தருமாறு முறையீடு செய்திருந்தனர் என்று சொன்னால் சரிதான்.

4. விசாரணை செய்து ராமசாமி அவர்களுக்கு 6 ஆயிரம் ரூபாய் மாதாந்திர தொகையாக கொடுக்க கூறினார்கள் சிறிய மகன் ரமேஷ் கொடுக்க வேண்டும் என்று கூறினார்கள். மேற்கண்ட விபரங்கள் அனைத்தும் தெரிந்த பின்னிட்டு தான் வா.சா.ஆ–2 இரண்டாவது மகன் ரமேஷின் மனைவி பத்மாவதி என்பவரின் பெயருக்கு எழுதிக் கொடுக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். அந்த ஆவணத்தில் நானும் கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

5. வா.சா.ஆ–2ல் முதல் சாட்சியாக பத்மாவதி கணவர் ரமேஷும் இரண்டாவதாக நானும் சாட்சி கையப்பம் செய்துள்ளோம் என்றால் சரிதான்.மேற்படி ஆவணம் மோசடியாக தயார் செய்யப்பட்டது என்பது தெரிந்துவிடும் என்பதால் தான் நான் சாட்சி கையொப்பம் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி விஷயங்களை எதிர்த்து அவர்

மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் நீதிப்பேராணை மனு தாக்கல் செய்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

6. எனக்கு நீதிபேரணை மனு தாக்கல் செய்த விவரம் நன்றாக தெரியும் எனவும் நீதிமன்றத்தில் தெரியாத என பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் தீய வழியில் லாபம் பெறுவதற்காக தான் வா.சா.ஆ–2 ஆவணத்தை ஏற்படுத்தி அதில் சாட்சி கையொப்பம் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. அதற்கு உறுதுணையாகவும் இருந்தேன் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்து 1992 இல் இருந்து தொடர்ந்து பிரதிவாதியின் அனுபவத்தில் இருந்து வந்து அவர் அங்கு குடியிருந்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல.

7. நான்கைந்து ஆண்டுகளுக்கு முன்புதான் மகளின் திருமணம் வரை அங்கு இருந்து கொள்வதாக கூறி அவர் அங்கு குடியேறினார். வாதியின் அனுமதியுடன் திருமணம் வரை மட்டுமே பிரதிவாதி வசித்துகொள்வதாக கேட்டுகொண்டு குடியிருந்தார். நீங்கள் சொல்வது பொய். வாதியின் அனுமதி கேட்டு குடியிருக்கவில்லை அவர் தொடர்ந்து 1992 ல் இருந்து குடியிருந்து வருகிறார் என்றால் சரியல்ல.

8. 1995 பின்னிட்டு நான் அவ்விடத்தில் வசிக்கவில்லை என்று கூறியுள்ள நிலையில் மேற்படி விபரங்கள் தெரிந்திருக்க வாய்ப்பில்லை என்று

சொன்னால் சரியல்ல.  வாதிக்கு தாவா சொத்தில் எவ்வித வழக்கு மூலமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதிக்கு தாவா சொத்தில் மூன்றில் ஒரு பங்கு உரிமை உள்ளது என்று சொன்னால் சரியல்ல.  பிரதிவாதி தொடர்ந்து தாவா சொத்தில் அனுபவத்தில் தொடர்ந்து இருந்து வருவது தெரிந்த ஆதாயம் அடையும் நோக்கில் வாதியின் செயலுக்கு  துணையாக செயல்பட்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

UMA MAHESHWARI

Digitally signed by UMA MAHESHWARI
Date: 2026.08.11 18:07:51 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.